பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 05 2026** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. சோழர்கால செப்பேடுகள் மீட்கப்பட்டது தமிழர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சோழர்களின் வரலாற்று பெருமையை பிரதமர் உலக அளவில் கொண்டு சேர்த்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் போதிய பேருந்துகளை இயக்குவதற்கு தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4. நீலகிரி, கோவை உட்பட 17 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று, மூன்று தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<<>>>>>>

நாட்டின் விலை மதிப்பில்லா மரபு செல்வங்களை பாதுகாக்கும் முயற்சியில் தமது அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — Modi (1) — 57 Sec.)***

நெதர்லாந்தில் இருந்த சோழர்கால செப்பேடுகள் மீட்கப்பட்டுள்ளது தமிழர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — Modi (2) — 58 Sec.)***

விடுமுறை நாட்களில் இளையோர் ஏதாவது ஒரு கோளரங்கத்திற்கு சென்று பார்வையிட வேண்டும் என்றும் பிரதமர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — Modi (3) — 54 Sec.)***

மாணவர்களின் பங்களிப்புடன் பாதுகாப்புப் படை வீரர்களின் நலனுக்காக 40 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிய தமிழகத்தை சேர்ந்த ஆசிரியர் கிரிஜா குறித்தும் பிரதமர் குறிப்பிட்டு பேசினார்.

***(Sound Byte — Modi கிரிஜா (4) — 56 Sec.)***

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

இதற்கிடையே, சாதாரண மக்களின் சாதனைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தமது மன் கி பாத் நிகழ்ச்சியில் தொடர்ந்து எடுத்துரைத்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் பிரதமர் ஆற்றிய உரையை பிஜேபி நிர்வாகிகளோடு கேட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(Sound Byte — L. Murugan (1) - 59 Sec)*

சோழர்களின் வரலாற்று பெருமையை உலக அளவில் பிரதமர் கொண்டு சேர்த்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

*(Sound Byte — L. Murugan (2) - 57 Sec)*

<<<<<<<<>>>>>>

தமிழகத்தில் போதிய பேருந்துகளை இயக்குவதற்கு தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் அரசு பேருந்துகள் இல்லாமல் பத்து மணிநேரத்திற்கும் மேலாக பயணிகள் காக்க வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தவெக அரசின் இந்த செயல் கண்டனத்திற்குரியது என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், உள்ளிட்ட 17 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் மாநில அமைச்சர் திரு ஸ்ரீநாத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு **3** ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா இன்று, மூன்று தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில் **Mushkan-**னும், ஆடவர் **800** மீட்டர் ஓட்டத்தில் **Mogali Venkatram-**மும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியாவிற்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

ஆடவர் வட்டு எறிதலில் **Nishchay** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இந்தியா, மகளிர் **100** மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும், ஆடவர் **400** மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

-----------

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா **3-1** என்ற கோல் கணக்கில் கொரியாவை வென்றது.

**<<<<<<<<<END>>>>>>>**